# கோலாட்டத்துடன் இலையுதிர் காலக் கொண்டாட்டம்



படம்: தெம்பனீஸ் ஈஸ்ட் தொகுதி அலுவலகம்

நீண்ட நேரம் தொடர்ந்து ‘தானியா’ நடனமாடி சாதனை படைத்தனர் தெம்பனீஸ் வட்டாரவாசிகள். ஈஸ்ட் விழாப் பூங்காவில் நடந்த வித்தியாசமான இலையுதிர் கால கொண்டாட்டத்தில் பாரம்பரிய இந்திய ஆடைகள் அணிந்த 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் நடனம் ஆடி மகிழ்ந்தன.

தானியா நடனத்தில் இந்தியப் பெண்களுடன் சீன பெண்மணிகளும் ஆடி மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர்.

நவராத்திரியின் கடைசி நாளான விஜயதசமியை இந்தியாவின் ஒரு பகுதியினர் ‘தசரா’ விழாவாகக் கொண்டாடுவர். தீமை அழிக்கப்பட்டு நன்மை வென்றதைக் கொண்டாடும் இந்த விழாவின்போது கழிகளைக் கொண்டு கோலாட்டம் ஆடுவது ஒரு பாரம்பரியம்.

இந்த நடன நிகழ்ச்சி குடும்பங்களையும் வட்டாரவாசிகளையும் ஒன்றிணைக்க உதவியதாக தெம்பனீஸ் ஈஸ்ட் ‘4’வது வட்டார குடியிருப்பாளர்கள் குழுத் தலைவர் திருவாட்டி ஜூடித் லீ குறிப்பிட்டார்.

அக்கம்பக்கத்தில் வசிப்பவர்களுடன் உறவாட இத்தகைய நிகழ்ச்சிகள் உதவுவதாக அப்பகுதியில் வசிக்கும் திருமதி மீனா (48) கூறினார். அவர் தமது குடும்பத்தினர் இக்கொண்டாட்டத்தில் பங்கேற்றார்.

Copyright 2009 Singapore Press Holdings Ltd.